தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

சித்திரை 23, வெகுதான்ய—திருவள்ளுவர் ஆண்டு 2029

1998 மே 6, புதன்கிழமை

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. பரிதி இளம்வழுதி அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:

"குடிப்பிறந்து குற்றத்தின் நீங்கி வடுப்பரியும்
நாணுடையான் கட்டே தெளிவு"

குற்றமற்றவனாகவும், பழிச்செயல் புரிந்திட அஞ்சி நாணுகின்றவனாகவும் இருப்பவனையே உயர்குடியில் பிறந்தவன் எனத் தெளிவு கொள்ள வேண்டும்.

1. வினாக்கள்-விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள். வினா எண் 441, திரு. அ. சுடலைமுத்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

441—

உதவித் தொகையை உயர்த்துதல்

***5963**—திரு. அ. சுடலைமுத்து:*

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஒரு குடும்பத்திலுள்ள ஒரே ஒரு நபரும் இராணுவத்தில் பணிபுரிந்தால் அக்குடும்பத் தலைவன் அல்லது தலைவிக்கு உதவித் தொகையாக ரூ. 450 வழங்கப்படுவதை உயர்த்தித் தர அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

ஒரு குடும்பத்திலுள்ள ஒரே ஒரு நபரும் இராணுவத்தில் பணிபுரிந்தால் அக்குடும்பத் தலைவர் அல்லது தலைவிக்கு உதவித் தொகையாக ரூ. 450 வழங்கப்படுவதை உயர்த்தித்தர அரசு பரிசீலனை செய்ததில் அரசின் நிதி ஆதாரங்களைக் கருத்தில் கொள்ளும்போது இதற்குமேல் ஊக்கத் தொகையோ அல்லது உதவித் தொகையோ வழங்க இயலாது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. அ. சுடலைமுத்து, இருக்கையில் இல்லை. வினா எண் 442, திரு. கே. சுப்பராயன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

442—

கனிம வளங்கள் குறித்து நில ஆய்வு

****6591*—திரு. கே. சுப்பராயன்:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டிலுள்ள கனிம வளங்கள் குறித்து நில ஆய்வு செய்ய அதிநவீன அறிவியல் முறைகளை மேற்கொள்ள அரசு உத்தேசித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) புவியியல் மற்றும் சுரங்கத் துறை கனிம வளங்களைக் கண்டறிய அதிநவீன தொழில் நுட்ப உத்திகளைப் பயன்படுத்தி கனிம ஆய்வுகளைச் செய்து வருகிறது.